**செய்தி வெளியீடு எண்: 419** **நாள்: 12.07.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

## UPSC முதன்மைத் தேர்விற்கு (IAS-MAINS)அரசு சார்பில் இலவசப் பயிற்சி

சென்னையில் பசுமைவழிச் சாலையில் இயங்கி வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் ஒவ்வோர் ஆண்டும் இளைஞர்களுக்கு குடிமைப் பணித் தேர்வுகளை எழுத பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி மையம் வகுப்பறைகள், தங்கும் வசதி, உணவு விடுதி, நூலகம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றுள்ளது. மாணவர்கள் கட்டணம் ஏதுமின்றி உணவருந்தவும், தங்கிப் படிக்கவும் இங்கு வசதிகள் இருப்பதோடு தரமான பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதிரித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. முதன்மைத் தேர்வு எழுதுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் அளிக்கப்படுகிறது. இந்த மையத்திற்கான புதிய வளாகத்தை 12.14 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் 2012–ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இங்கு பயின்ற பலர் ஆண்டுதோறும் வெற்றி பெற்று அகில இந்தியப் பணி அதிகாரிகளாகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள்.

தற்போது முதல் நிலைத் தேர்வு முடிந்து முடிவுகள் வெளிவரவிருக்கின்றன. இதில் வெற்றி பெறுபவர்கள் முதன்மைத் தேர்விற்கு (Mains) இம்மையத்தில் தங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். தமிழக மாணவர்கள் எங்கு பயிற்சி பெற்று முதல்நிலைத் தேர்வை வெற்றிகரமாக முடித்திருந்தாலும் இந்த மையத்தில் முதன்மைத் தேர்விற்கு பயிற்சி பெற பதிவுசெய்துகொள்ள அனுமதி அளிக்கப்படும். இம்மையத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு குடிமைப் பணி முதன்மை தேர்வு (Mains) எழுதும் இளைஞர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முதல் நிலை (Preliminary) முடிவுகள் வெளியிடப்பட்ட இரண்டு தினங்களுக்குள் www.civilservicecoaching.com என்ற இணையதளத்தில் தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளலாம். 225 பேர் தங்கிப் பயில உண்டு, உறைவிட வசதிகள் இம்மையத்தில் உள்ளன.

**D.ஜெயக்குமார்,**

**மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**